பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

21 08 2025 THURSDAY 7.15 PM

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரானுடன் ஆக்கப்பூர்வமான விஷயங்கள் குறித்து பேசியுள்ளார்.

2. விண்வெளித்துறையின் வளர்ச்சிக்கான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்தது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

4. சென்னை - ரஷ்யாவின் Vladivostok இடையேயான கடல்சார் போக்குவரத்தை விரைந்து தொடங்குவது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், அந்நாட்டு அமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளார்.

5. *20* வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Kajal* மற்றும் *Sarika* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரானுடன் தொலைபேசி வாயிலாக கலந்துரையாடினார்.

இதுதொடர்பாக, பிரதமர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த கலந்துரையாடலின்போது ஆக்கப்பூர்வமான விஷயங்கள் குறித்து விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மற்றும் மேற்காசிய பிரச்சினைகளுக்கு சுமூக தீர்வுகாண்பதற்கான முயற்சிகள் குறித்து திரு மெக்ரானுடன் பேசியதாக அவர் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக இருந்துவரும் இந்தியா – பிரான்ஸ் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்தும் இந்த தொலைபேசி உரையாடலில் தாம் பேசியதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

சர்வதேச விண்வெளி நிலைய பயணத்தை வெற்றிகரமாக முடித்த குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் நேரில் வாழ்த்து தெரிவித்தார்.

இதுதொடர்பாக திரு ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் பயணத் திட்டத்தில் இந்த வெற்றி ஒரு மைல்கல் என்று குறிப்பிட்டுள்ளார்.

குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவின் அனுபவங்கள் குறித்து கேட்டறிந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விண்வெளி பயணத்தின்போது சுபான்ஷு சுக்லாவுக்கு கிடைத்துள்ள அனுபவம் ககன்யான் திட்டத்தை இஸ்ரோ வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு பேருதவியாக இருக்கும் என்று திரு ராஜ்நாத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய விண்வெளி பயணத் திட்டத்தில் விமானப்படையின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விண்வெளித்துறை தொடர்ந்து வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இஸ்ரோ தலைவர் திரு நாராயணன், குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவுடன் இணைந்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் சுபான்ஷு சுக்லா மேற்கொண்ட ஆய்வுகள் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் பயன்படும் என்று கூறினார்.

நாட்டின் பாதுகாப்பில் விண்வெளி தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் இதற்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்றும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் பேசுகையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ் விண்வெளித்துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக கூறினார்.

குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா பேசுகையில், சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் தாம் மேற்கொண்ட ஆய்வுப்பணிகள் முழுமையாக வெற்றியடைந்திருப்பதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்தது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மாலை செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு இடையூறு ஏற்படுத்தியதால், புதிய உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்காமல் போனதாக கூறினார்.

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்ற இந்திய விண்வெளி வீரர் குருப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவுக்கு பாராட்டு தெரிவிக்கும் தீர்மானத்திற்குக்கூட எதிர்க்கட்சிகள் அனுமதி அளிக்காமல் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டதாக கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை வலியுறுத்த எதிர்ப்பு தெரிவிக்கலாம் என்றாலும், நாடாளுமன்ற நடவடிக்கைகளை முடக்கும் வகையில் செயல்படுவது ஜனநாயகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயல் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நடப்பு மழைக்கால கூட்டத்தொடரில் மக்களவை 31 சதவீதமும், மாநிலங்களவை 39 சதவீதமும் முழுமையாக செயல்பட்டதாக தெரிவித்தார்.

இந்த கூட்டத்தொடரின்போது மக்களவையில் 14 மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டதாகவும், அதில் 12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் கூறினார்.

மாநிலங்களவையில் 15 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒட்டுமொத்தமாக, 15 மசோதாக்களுக்கு மழைக்கால கூட்டத்தொடரில் நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்திருப்பதாகவும் திரு கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<<<<>>>>>>

அரசுமுறைப்பயணமாக ரஷ்யா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு Sergey Lavrov-வுடன் இருதரப்பு விஷயங்கள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தைக்குப் பின் இரு அமைச்சர்களும் கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அப்போது பேசிய திரு ஜெய்சங்கர், இரண்டாம் உலகப்போருக்கு பின் இந்தியா – ரஷ்யா இடையிலான உறவுகள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளதாக தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கான ஏற்றுமதியை அதிகரிப்பது குறித்தும் தாம் ஆலோசனை நடத்தியதாக கூறிய திரு ஜெய்சங்கர், இறக்குமதி வரி மற்றும் ஒழுங்குமுறை கட்டுப்பாடுகளை தளர்த்துவதன்மூலம் ரஷ்யாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதியை கணிசமாக அதிகரிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மருந்துப்பொருட்கள், வேளாண் பொருட்கள், ஜவுளி உள்ளிட்ட பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆலோசனை நடத்தியதாக அவர் கூறினார்.

உரங்களை நீண்டகால அடிப்படையில் ஏற்றுமதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நீடித்த எரிசக்திக்கான ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்தும் தாம் பேச்சு நடத்தியதாக அவர் கூறினார்.

சர்வதேச வடக்கு – கிழக்கு போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து தாம் வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்னையிலிருந்து, ரஷ்யாவின் Vladivostok –கிற்கு கிழக்கு மண்டல கடல்சார் போக்குவரத்து மற்றும் வடக்கு கடல் பிராந்திய ஒத்துழைப்பு குறித்தும் ரஷ்ய வெளியுறவு அமைச்சருடன் தாம் பேசியதாக திரு ஜெய்சங்கர் கூறினார்.

இந்த கடல்சார் போக்குவரத்து நடைமுறைக்கு வரும்போது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் மேலும் வலுப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னை – Vladivostok கடல்சார் போக்குவரத்து கட்டமைப்பு பயண நேரத்தை கணிசமாக குறைக்கும் என்றும் அவர் கூறினார்.

ரஷ்யாவின் Kazan மற்றும் Yekaterinburg- ஆகிய இடங்களில் புதிய இந்திய தூதரகங்களை அமைக்கும் பணியை ரஷ்யா விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ரஷ்ய ராணுவத்தில் பணியாற்றும் இந்தியாவை சேர்ந்தவர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும் என்று தாம் கேட்டுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகளாவிய நிர்வாக கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்தும் தாம் பேசியதாக அவர் கூறினார்.

உக்ரைன், மேற்கு ஆசியா, ஆப்கானிஸ்தான் அரசியல் சூழ்நிலை குறித்தும் தாம் ஆலோசித்ததாக அவர் கூறினார்.

தீவிரவாதத்தை அனைத்து வகையிலும் முறியடிக்க வேண்டும் என்று இந்தியாவும், ரஷ்யாவும், மீண்டும் உறுதியேற்றுள்ளதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்தும் நோக்கில் தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக, ஜனதாதளம் கட்சியை சேர்ந்த குழுவினர் இன்று புதுதில்லியில், தலைமை தேர்தல் ஆணையர் Gyanesh Kumar-ஐ சந்தித்து தேசிய மற்றும் மாநில அளவில் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் சீரமைப்புகள் குறித்து விவாதித்தனர்.

கடந்த 150 நாட்களில் தேர்தல் ஆணையம் நாடு முழுவதும் இதுபோன்று 4 ஆயிரத்து 700-க்கும் மேற்பட்ட ஆலோசனை கூட்டங்களை நடத்தியுள்ளது.

இதில் 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தங்களது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

<<<<<<>>>>>>

சுங்கச்சாவடிகளில் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கப்படுவதாக சமூக வலைதளத்தில் பகிரப்படும் தகவல்கள் உண்மை அல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேலும், இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.**

<<<<<<>>>>>>

**தில்லி காவல்துறை ஆணையராக திரு Satish Golcha-வை நியமித்து மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.**

**தற்போது, தில்லி சிறைத்துறை இயக்குனராக பணியாற்றிவரும் அவர், இப்பதவிக்கு நியமிக்கப்படுவதாக அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

<<<<<<>>>>>>

**தெலங்கானா மாநிலத்தில் இரண்டு நக்சலைட்டுகள் இன்று காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.**

**செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த காவல்துறை ஆணையர் திரு சுதீர் பாபு, காவல்துறை மேற்கொண்ட முயற்சி காரணமாக இந்த இரண்டு நக்சலைட்டுகளும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளதாக கூறினார்.**

<<<<<<>>>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*20* **வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின்** *Kajal* **மற்றும்** *Sarika* **அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.**

**பல்கேரியாவின்** *Samokov*-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர்** *72* **கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில்** *Kajal* - **கிர்கிஸ்தானின்** *Kaiyrkul Sharshebaeva* -**வை வென்றார்.**

53 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Sarika - சீனாவின் Tianyu Sun-ஐ வென்றார்.

---------------

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று 4 தங்கம் மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

---------------

ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Salima Tete தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>